**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.24/2024 – PW-7**

| | |
|---|---|
| Name | திரு.ராஜீ |
| Husband/Father Name | வடிவேல் |
| Village /Area | பானாவரம் |
| Taluk | நெமிலி |
| Occupation | வழக்கறிஞர் |
| Age | 45 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 16.07.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்சமயம் வழக்கறிஞராக பணி செய்து வருகிறேன். 11.03.2016 ஆம் தேதி நான் பானாவரம் ஊராட்சி மன்றத்தில் துணை தலைவராக இருந்த போது பானாவரம் காவல் நிலையத்தில் சுமார் காலை 08.00 மணியளவில் எங்கள் கிராம பிரச்சனை காரணமாக சென்ற போது நெமிலியில் நடந்த கொலை சம்பந்தமாக 2 நபரை விசாரித்துக்கொண்டிருப்பதாகவும் அதற்கு என்னை சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் ஒப்புக்கொண்டு கையொப்பம் இட்டேன். எதிரியை யாரும் எனக்கு காட்டவில்லை. போலீசார் கைப்பற்றிய பொருள் என்ன வென்று எனக்கு தெரியாது. எதிரிகள் யசோதா, அருண் ஆகியோர்களை விசாரித்துக் கொண்டிருந்தார்கள் அவர்களை விசாரணை செய்து பதிவு செய்த வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது

கையொப்பம் என்னுடையது தான் அது அதசா.3 மற்றும் அதசா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மற்றும் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான் அந்த கையொப்பம் அதசா.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**

**ஒம்./—திருமதி. கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**